தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, தை 20

2012 பிப்ரவரி 3, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."

ஒழுக்கம் உள்ளவர் என்பதே அவர் உயர்ந்த குடியில் பிறந்தவர் என்பதற்கு அடையாளம் ஆகும். ஒழுக்கம் இல்லாதவர் இழிந்த குடிப் பிறப்பின் தன்மையை உடையவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

மின் கம்பிகள்

***6334 திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், ஏர்வாடி, முந்தல், ஒப்பிலான் கிராமங்களிலுள்ள பழைய மின் கம்பிகளை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கம், ஏர்வாடி, முந்தல், ஒப்பிலான் போன்ற கடற்கரை கிராமங்களிலுள்ள பழைய மின் கம்பிகளை மாற்ற அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்படவுள்ளது. மதிப்பீடுக்கு அனுமதி பெற்றவுடன் மின் கம்பிகளை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, அனுப்பானடி மின் பகிர்வு நிலையத்திலிருந்து செல்லும் பவர் லைன், குடியிருப்புப் பகுதிகளில் மிகத் தாழ்வாகச் செல்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் 10 பேர் பவர் லைனில் சிக்கி மரணமடைந்துவிட்டனர். சமீபத்தில் ஒரு சிறுவனும் இறந்துவிட்டான். இதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டு, இதற்கு மாற்று ஏற்பாடு செய்வதற்கு, தமிழக அரசுக்குக் கடிதம் எழுதுவதாகத் தெரிவித்தார். எனவே, தாழ்வாகச் செல்லும் பவர் லைனுக்கு மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே கோரிக்கையைக் குறித்து ஏற்கெனவே நமது மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நான் அங்கே வந்திருந்தபொழுது நேரிலே என்னிடத்திலே தெரிவித்து இருந்தார்கள். அப்பொழுதே, அதுசம்பந்தமாக, தலைமைப் பொறியாளர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளரையும் அழைத்து, பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை நேரிலே கண்டறிந்து, எந்தெந்த இடங்களிலே தாழ்வாகச் செல்கின்ற மின் கம்பிகளை மாற்றி அமைக்க முடியுமோ, அந்தந்த இடங்களிலெல்லாம் மாற்றி அமைக்க

2012 பிப்ரவரி 3]

வேண்டுமென்று ஏற்கெனவே அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணிகள் விரைவாக நடைபெறுவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

31—

பேருந்து நிலையம்

***1303—திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டத்தில் பேருந்து நிலையம் அமைக்கும் பணியை விரைவில் நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தப் பேருந்து நிலையம் விரைவில் திறக்கப்பட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்குச் சுற்றுச்சுவர் கட்டித் தருவார்களேயானால் நிச்சயமாக நிறைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அது அமையும். அணுகு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதற்கும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு நகராட்சி நிருவாகத்தை அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அதனுள்ளே கடைகள் நிச்சயமாக அமைந்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால், மக்கள் வந்து*